Registered as a News Paper  பக்கங்கள் 04  விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM  Peoples Daily  மக்கள் தினசரி

நாதம் 03  திருவள்ளுவர் ஆண்டு 2023  கார்த்திகை 09  (24-11-1992)  செவ்வாய்க்கிழமை  ஓசை 28

## 'மெரினாலில்' வந்த பழுதான மா பருத்தித்துறையில் இறக்கபடுகிறது

பருத்தித்துறை துறைமுகத்திற்கு 'மெரினால்' கப்பலில் எடுத்து வரப்பட்ட உணவுப் பொருள்களில் மா பாவனைக்கு உதவாத நிலையில் 60 வீதம் பழுதடைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. மற்றும் அரிசி பயன்படுத்தக் கூடியதாக இருப்பதாகவும் அறியமுடிந்தது. காங்கேசன் துறைமுகத்திலிருந்து கப்பலில் பருத்தித்துறை துறைமுகத்திற்கு எடுத்து வரப்பட்ட உணவுப் பொருள்களை இன்று பரிசோதனை செய்யச் சென்ற குழு திரும்பிய பின்னர் உணவுப் பொருள்களின் நிலைபற்றி அறிய முடிந்தது. கப்பலில் 494 மெற்றிக்தொன் அரிசியும், மா 504 மெற்றிக்தொன்னும் எடுத்து வரப்பட்டுள்ளன. [4 ஆம் பக்கம் பார்க்க]

# சுழிபுரத்தில் அகோர எறிகணை வீச்சு

# 5 பொது மக்கள் பலி: 10 பேர் காயம்

## நேற்றுக் காலை ராணுவம் அனர்த்தம்

[சுழிபுரம்]

சிறிலங்கா ராணுவத்தினர் சுழிபுரம் பகுதியிலுள்ள பொதுமக்களின் குடியிருப்புக்கள் மீது நேற்றுக்காலை அகோர எறிகணைத் தாக்குதல் நடத்தினர். பலமணிநேரம் தொடர்ச்சியாக நடாத்தப்பட்ட இத்தாக்குதலில் ஐந்து அப்பாவிப் பொதுமக்கள் பலியாகியுள்ளனர். பத்துப்பேர் வரையில் காயமடைந்தனர், பல குடியிருப்புக்களும் சேதமடைந்தன.

நேற்று அதிகாலை முதல் நண்பகல் வரை பலாலி, மாதகல் ஆகிய சிறிலங்கா இராணுவ முகாம்களில் இருந்து சுழிபுரம் மற்றும் அதனை அண்டியுள்ள பகுதிகளான காட்டுப்புலம், குடாக்கனை, வறுத்தோலை, நீத்துவன், பறாளை, பச்சந்தை, றாத்தலடி ஆகிய பகுதிகளில் உள்ள பொது மக்களின் குடியிருப்புக்களை நோக்கி அகோர எறிகணைத் தாக்குதல் நடாத்தப்பட்டது. அதே வேளை மாதகல் கடற் பரப்பில் தரித்துநின்ற பீரங்கிப் படகில் இருந்தும் மேற்படி பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதல் நடாத்தப்பட்டது. அத்துடன் சில்லாலைக் கடற்கரை வீதிப்பகுதியில் தரித்து நின்ற யுத்த டாங்கியில் இருந்தும் குடியிருப்புப்பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதல் நடாத்தப்பட்டதுடன் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதல்களால் மேற்படி பகுதிகளைச் சேர்ந்த பொது மக்கள் தமது குடியிருப்புக்களை விட்டு சிதறி ஓடினர். இப்பகுதிகளில் பல எறி

( 4ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் விடிவிற்காக மரணித்த மாவீரருக்கு வருடம் தோறும் விழா

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர ஆயுதப் போராட்டம் ஆரம்பமாகிய காலத்திலிருந்து இன்றுவரை 5000க்கும் மேற்பட்ட போராளிகள் மக்களுக்காக மடிந்திருக்கின்றார்கள். மக்களின் விடுதலைக்காகத் தங்களது உயிரை அர்ப்பணித்துள்ளனர். மக்கள் சுதந்திரத்திற்காக, கௌரவத்திற்காக, பாதுகாப்பிற்காக தமது வாழ்க்கையை அர்ப்பணித்துள்ளார்கள். மக்களின் விடிவிற்காக மரணத்தைத் தழுவிக் கொண்ட இந்த மாவீரர்களுக்கு ஆண்டுதோறும் விழா எடுக்க எமது இயக்கம் முடிவு செய்துள்ளது இவ்வாறு மாவீரர் தினத்தை யொட்டி வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலில் களத்தில் மடிந்த சத்தியநாதன் (லெப். சங்கர்) உயிர்நீத்த நாளை (கார்த்திகை 27) மாவீரர் தினமாகத் தமிழீழம் எங்கும் கொண்டாடி எமது தியாக தீபங்களை நினைவில் ஏற்றி வைக்குமாறு எமது மக்களை அன்புடனும், உரிமையுடனும் கேட்டுக் கொள்கின்றோம்.

வாழ்வில் உயிரைப் போல அளப்பரிய செல்வம் வேறு எதுவும் இல்லை என்பார்கள். அப்படியான உயிர்ச் செல்வத்தைத் தியாகம் செய்ய ஒருவன் துணிகின்றான் என்றால் உயிரிலும் மேலான உன்னதமான இலட்சியம் ஒன்று இருக்கத்தான் செய்கிறது இந்த

(4ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவத்தின் முன்னேற்ற முயற்சி விடுதலைப் புலிகளால் முறியடிப்பு

(சுழிபுரம்)

மாதகலில் இருந்துசில்லாலை கடற்கரை வீதிவழியாக டாங்கிகள் சகிதம் நேற்றுமுன்னேற முயன்ற இராணுவத்தினரது முயற்சி புலிகளின் பலத்த எதிர்த்தாக்குதலினால் முறியடிக்கப்பட்டது.

நேற்றுக் காலை ஆறு மணி

## புதையுண்ட டாங்கியைமீட்க இராணுவம் பகீரத முயற்சி

எதிர்த் தாக்குதலை நடத்தினர். இதனைத் தொடர்ந்து இராணுவத்தினர் தமது முன்னேறும் முயற்சியைக் கைவிட்

பிரயத்தனத்தில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் புலிகள் நடத்திய பலமான எதிர்த்தாக்குதலினால் டாங்கி மீட்பு நட

### வீரச்சாவு



## யாழ். கோட்டையினுள்ளும் மாவீரர் வார அலங்காரங்கள்

(யாழ்ப்பாணம்)

மண்மீட்புப் போரில் தம் இன்னுயிர்களை தியாகம் செய்த மாவீரர்களை நினைவு கூரும் வகையிலான இவ்வாண்டுக்கான மாவீரர் வாரம் நேற்று மூன்றாவது நாளாக எழுச்சி பூர்வமாக தமிழீழ

...ளின் பிடியில் சிக்கியிருந்த யாழ். கோட்டையில் இருந்து அன்னியர் விரட்டியடிக்கப்பட்டு அங்கு தமிழீழ தேசியக் கொடி ஏற்றப்பட்டு அங்கும் தமிழீழ மாவீரர் வார எழுச்சி நிகழ்வுகள் தினசரி நடைபெற்று வருகிறது.

மனித வாழ்வில் அர்த்தமேயில்லை'' என்ற தமிழீழ தேசியத்தலைவர் திரு. வே பிரபாகரனது வாசகமும், ''மரணம் ஒரு தடவைதான் வரும். அதற்காக மானத்தை விற்று சீவிக்க முடியுமா? இழப்புக்குப் பயந்து இனதை அழியவி...

நேற்றுக் காலை ஆறு மணிக்கு மாதகலில் இருந்து சில் லாலை சம்பில்துறைப் பகுதியை நோக்கி பல நூற்றுக் கணக்கான இராணுவ டாங்கிகள், கவசவாகனங்கள் சகிதம் முன்னேற முயன்றனர். இவர்களைத் தடுத்து காலையில் இருந்து நண்பகல் வரை விடுதலைப் புலிகள் பலத்த னேறும் முயற்சியைக் கைவிட்டனர்.

இதேவேளை, முன்னேறும் முயற்சியில் ஈடுபட்ட இராணுவத்தினருக்கு துணையாக வந்த டாங்கி ஒன்று தரையில் புதைந்து கொண்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதைத் தொடர்ந்து தரையில் புதையுண்ட டாங்கியை மீட்டுக் கொள்வதற்குப் பகீரதப் தலினால் டாங்கி மீட்பு நடவடிக்கை பெரிதும் தாமதப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை புதையுண்ட டாங்கியைப் புலிகள் கைப்பற்றிவிடக்கூடாது என்பதற்காக அப்பகுதியில் பலமான எறிகணைத் தாக்குதல் இராணுவத்தால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரியவருகிறது.



கப்டன் கதிரவன்

வவுனியா ஓமந்தைப் பகுதியில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் தமிழீழ விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்ச வு அடைந்தார்.

வீரச்சாவு அடைந்த கப்டன் கதிரவன் (மருத்தீனுப்பிள்ளை கிறிஸ்ரியன் பெனான்டோ- 4 ஆம் வட்டாரம், எழுவை தீவு) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

எழுச்சி பூர்வமாக தமிழீழமெங்கும் அனுஷ்டிக்கப்பட்டது.

1505 ஆம் ஆண்டு முதல் காலாகாலமாக அன்னியர்க பெற்று வருகிறது.

'வியர்வை சிந்தி இரத்தம் சிந்தி தாங்கொணாத் துன்பத்தின் பரிசாகப் பெறுவது தான் சுதந்திரம். சுதந்திரமில்லா பயந்து இனதை அழியவிட முடியுமா'' என்ற தியாகி திலீபனது வாசகமும் கோட்டையின் வாசலின் இரு மருங்கி

[4ஆம் பக்கம் பார்க்க]

# ஆயிரக்கணக்கான மக்கள் சுழிபுரத்தில் இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று நடாத்திய அகோர எறிகணைத் தாக்குதலினால் ஆயிரக் கணக்கான மக்கள் தமது சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து அகதிகளாகியுள்ளனர்.

சுழிபுரம், குடாக்கனை, வறுந்தோலை, பச்சந்தை, நீத்துவன், காட்டுப்புலம், பறாளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 700 ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மேற்படி பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்துள்ளன. இவர்கள் தமது உடமைகள் அனைத்தையும் இழந்த நிலையில் உடுத்த உடுப்புக்களுடன் வெளியேறியுள்ளனர். இவர்களில் பலர் வட்டுக்கோட்டை , சங்கானை ஆகிய பகுதிகளில் தற்காலிக இருப்பிடங்களில் தங்கியிருக்கின்றனர். சிலர் தங்க இட வசதி இன்றி வீதியோரங்களிலும் மரங்களின் கீழும் தங்கியிருந்தனர். (க)

# இராணுவத்தினர் மீது மோட்டார் தாக்குதல்

(வவுனியா)

வவுனியா சமயபுரம் காவலரண்களுக்கு முன்னால் வேலை செய்துகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது கடந்த சனியன்று காலை 7.25 மணியளவில் விடுதலைப் புலிகள் மோட்டார் ஷெல் தாக்குதலை நடத்தினர்

இத் தாக்குதலில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேத விபரம் தெரியவில்லை.

# முல்லையில் விமானத்தாக்கு இருவர் பலி; இருவர் படுகாயம்

முல்லை மாவட்டம் கற்சிலை மடுப்பகுதியில் கடந்த சனிக்கிழமை காலை சிறிலங்கா விமானப்படை ''சுப்பர் சொனிக்'' விமானங்கள் நடாத்திய குண்டுத் தாக்குதலில் இரண்டு பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இருவர் காயமடைந்தனர். இரண்டு வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டன.

காலை இப்பகுதிக்கு வந்த மூன்று சுப்பர் சொனிக் விமானங்கள் இப்பகுதியை வட்டமிட்டபின்னர் குண்டு வீச்சு தாக்குதலில் ஈடுபட்டன.

இத்தாக்குதலில் 4 ஆம் கண்டம் கற்சிலை மடுவைச் சேர்ந்த மாணிக்கவாசகர் அழகேஸ்வரன் (வயது 7) ஐயாதுரை தவமலர் (வயது 23) ஆகியோர் பலியாகினர்.

அதேயிடத்தைச் சேர்ந்த பரமானந்தன் ஐயாத்துரை (வயது 27), அவரது 8 மாதக் குழந்தை ஒன்று ஆகியோர் படுகாயம் அடைந்தனர்.

# பாவற்குளம் பகுதியில் புலிகள்-படை திடீர் மோதல்

[வவுனியா]

வவுனியா பாவற்குளம் நெடுங்கரைச்சேனையில் கடந்த சனியன்று பிற்பகல் 2-50 மணியளவில் சிறிலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் திடீர் மோதலொன்று ஏற்பட்டது.

இம் மோதலில் இராணுவ தரப்பில் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

# இன்று மண்மீட்பு நிதி மீளளிப்பு

தமிழீழ மீட்புநிதி கடன் மீளளி பு இன்று பின்வரும் இடங்களில் மேற்கொள்ளப் படவுள்ளதாக மீட்புநிதி நிதிப் பொறுப்பாளர் வெற்றியரசன் அறிவித்துள்ளார்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில்காலை9-00மணிதொடக்கம் 11-00 மணிவரை சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளி உ. அ. அ. பிரிவுகளுக்கும்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் வாக்குறுதி மீது எமக்கு சந்தேகம் இருக்கவில்லை


(யாழ்ப்பாணம்)

''மீட்பு நிதிக்கு வழங்கிய பவுணின் பெறுமதியை திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் என்பதில் எனக்கு சந்தேகம் இருக்கவில்லை. எப்போதோ ஒரு நாள் அது திரும்பக் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் தான் இருந்தேன். ஆனால் இவ்வளவு விரைவில் திருப்பித் தருவார்கள் என்று நான் எதிர்பாக்கவில்லை.'' இவ்வாறு ஆசீர்வாதம் வீதியைச் சேர்ந்த சீனியர் தியாகராஜா நேற்றுக் காலை நாவலர் மண்டபத்தில் மீட்புநிதி கடனை மீளப்பெற்றுக் கொண்ட போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

த்தி வைத்திருக்க வேண்டும் என்பது தான் எனது ஆசை. அது அடையாளமாக என்னிடம் எப்பொழுதும் இருக்கும் மீளவும் மீட்பு நிதி தேவைப்படும் பட்சத்தில் எனது வருமானம் இப்போதிருப்பதை விடத் தேறினால் மேலும் அதிகமாகக் கொடுப்பேன் என்றார். முகமலர்ச்சியுடன் மிக '' பொறுப்பாளர் தரும் பொற்காசைப் பவுத்திரப் படு

[4ஆம் பக்கம் பார்க்க]



நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற தமிழீழ மீட்பு நிதி கடன் மீளளிப்பு நிகழ்வில் பெண்மணி ஒருவர் தமிழீழ விடுதலைப் புலிகள் நிதிப பொறுப்பாளர் திரு செ. தமிழேந்தியிடமிருந்து கடன் மீளளிப்பை பெற்றுக் கொள்வதை படத்தில் காணலாம்.

## வரி விளம்பரம்

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு.) தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284) ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி.

(சி 5399)

### மாணவர்களுக்கு

பாடசாலைப் பிள்ளைகளுக்கான அப்பியாசக் கொப்பிகள், புத்தகங்கள் மலிவில் விற்பனையாகிறது. றோனியோ குறைந்த விலையில் செய்து கொடுக்கப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை வெலிங்டன் சந்திக்கருகாமை, யாழ்ப்பாணம். (சி-5409)

### மாதிரி வினாத்தாள்கள்

O/L வகுப்புகளிற்கான கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சமயம் (சைவம் றோ. க./கிறீஸ்தவம்), வர்த்தகம், விவசாயம், மனைப் பொருளியல், சித்திரம், சங்கீதம், நடனம் அகிய பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் (விடைகளுடன்) மலிவு விலையில் விற்பனையாகின்றன. Bond Institute, 582 Stanley Road, Jaffna. (சி-5450)

எமது நிறுவனத்தால் ஆண்டு 4 தொடக்கம் ஆண்டு 11 வரை நடாத்தப்பட்ட 3-ம் தவணை வினாத்தாள்களையும் (சகல பாடமும்) ஆண்டு 6 அனுமதி வினாத்தாள்களையும ஆண்டு 5 புலமைப் பரிசில் வினாத்தாள்களையும் பெற்றுக் கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (3686)

### உடன் விற்பனைக்கு

சுத்தமான பொமேரியன் பெண் நாயும், கூடும் விற்பனைக்கு உண்டு. பாமாஸ் கோழிகளும் விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இல. 6

## பெருந்தோட்டத் துறை இந்தியாவிடம் விற்பனை

- தினேஷ் குணவர்த்தனா

[கொழும்பு]

பெருந்தோட்டத்துறைபடிப் படியாக இந்தியர்களுக்கு விற்கப்பட்டு வருகின்றது தேவைப்பட்டால் அவற்றை வாங்கியவர்களின் பெயர்ப் பட்டியலை வெளியிடத் தயாராக இருக்கின்றேன் என்று மக்கள் ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தனா குறிப்பிட்டார்

பாராளுமன்றத்தில் வரவு - செலவுதிட்ட குழுநிலைவிவாதத்தில்கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில் இந்தவரவு செலவுத்திட்டம் தயாரிப்பில் உலக வங்கியின் ஆலோசனையும், வழிகாட்டலும்தான் முக்கியமாக இருக்கின்றது. என்றும் கூறினார்.

## சிறிலங்காவில் வெளியார் முதலீடு அதிகரிப்பது சிங்கப்பூருக்கு பொறாமையாம்

(கொழும்பு)

சிறிலங்காவில் வெளியார் முதலீடுகள் பெருகி வருவதை சிங்கப்பூர் போன்ற சில நாடுகளும், இப் பிராந்தியத்தில் இருக்கும், சில வெளிச் சக்திகளும் விரும்பவில்லை என்று அமைச்சர் பெர்னாண்டோ கூறினார்வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில் இத்தகைய சக்திகள் இங்கு குழப்பத்தை ஏற்படுத்தி முதலீட்டாளர்களை அச்சமடைய வைக்கலாம் என்றும் குறிப்பிட்டார்.

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

### அறிவித்தல்

அங்கத்தவர்கள் பலரின் வேண்டுகோளின்படி கோட்ட நிர்வாகிகள் பதவிகளுக்கான வேட்புமனுத் தாக்கல் இறுதித் திகதி 30-11-92 என நீடிக்கப்பட்டுள்ளது.

—பொதுச் செயலாளர், யாழ்-மாவட்டம்.

(3688)

நல்லூர் பகுதி கூட்டுறவாளர் கோட்ட மட்ட

### மாவீரர் தின விழா

காலம்: 25-11 92 புதன் பிற்பகல் 2 மணி

இடம்: யாழ் முத்துத்தம்பி மகாவித்தியாலயமண்டபம்

தமிழ் ஈழவிடுதலைப்புலிகள் பிரமுகர்களினதும், கூட்டுறவாளர்களினதும் சொற்பொழிவுகளும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

#### பங்கு கொள்ளும் சங்கங்கள்

★ நல்லூர் ப. நோ. கூ சங்கம்
★ காரைநகர் ப. நோ. கூ. சங்கம்
★ யாழ். புடைவை நெசவாளர் கூட்டுறவுச்சங்கம்
★ யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்
★ தென்னை, பனை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் கோண்டாவில்.

(சி/5457)

### மறைவின் 1-ம்மாத நிறைவு

மலர்வு 17 — உதிர்வு 25 —



# சு. கட்சி உட்பூசலை தீர்க்கும் சமாதான முயற்சியில் பிக்கு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இருக்கும் பிளவை தீர்ப்பதற்காக இன்று முக்கிய பேச்சுவார்த்தைகள் நடைபெற உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இக் கட்சிகளின் தலைமைப் பீடத்தில் ஏற்பட்டுள்ள பிளவை ஒரு முடிவுக்கு கொண்டு வரும் பொருட்டும், கட்சியில் ஒற்றுமையை ஏற்படுத்தும் பொருட்டும் இச் சமாதான முயற்சியில் புத்த பிக்கு ஒருவர் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை கட்சியின் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவினால் உப தலைவரான ஜே.ஆர்.பி சூரியபெரும கட்சியின் மத்திய குழுவில் இருந்தும், உபதலைவர் பதவியில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளார். இதற்கான உடனடிக் காரணம் எதுவென்று தெரியாத போதும் இவர் அனுராவின் தீவிர ஆதரவாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

தென்னிந்திய திருச்சபை - யாழ் பேராயம்

### நம்பிக்கை இல்லம்
### HOUSE OF HOPE

மேற்படி இல்லத்திற்கு உடல், வலது குறைந்த (Physically disabled) ஐந்து (5) வயதிற்கும் பதினாறு (16) வயதிற்கும் இடைப்பட்ட சிறுவர், சிறுமிகள் சேர்த்துக் கொள்ளப்பட இருக்கின்றனர். இதற்கு தகுதியுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறது.

விண்ணப்பதாரிகள் குடும்ப விபரத்துடன் அருள்திரு. சொலமன் மில்ரன் அவர்களை மக்லியோட் (Mc leod) வைத்தியசாலை, இணுவில் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

செயற்திட்ட பணிப்பாளர், தென்னிந்திய திருச்சபை

[3693]

### 6-ம் மாத நினைவஞ்சலி

வீர ஜனனம்: 20 — 03 — 1975



வீரச்சாவு: 01 — 06 — 1992

#### வீரவேங்கை இறைகுமாரன்

(இரவீந்திரநாதன் வேந்தன்)

தாயகத்தை மீட்கும்
விடுதலைப் போரிலே
உறுதியுடன் போராடி
உயிர்துறந்த வீரனே
உனது இலட்சியம்
ஈடேறும் நாள் தூரத்திலில்லை

-குடும்பத்தினர்

மயிலியதனை, தொண்டமானாறு.

(சி-5466)

நினைவில் மலர்ந்த இரண்டாம் ஆண்டு

### கண்ணீர்த் துளிகள்!!

### கல்விக்கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இந்திரன் கல்வி வளர்ச்சிக் கழகத்தினால் நடாத்தப்படும் க.பொ.த (சா.தா) மாணவர்களுக்கான இலவச கல்விக் கருத்தரங்கு ஸ்ரீ பார்வதிவித்தியாசாலை (அரியாலை) நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது விரும்பிய மாணவர்கள் கலந்து கொள்ளும்படி மேற்படி கல்வி வளர்ச்சிக்கழகம் அறிவித்துள்ளது.

இவ் வகுப்புக்கள் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் பி.ப. 3.30 - 6 00 மணி வரை நடைபெறும்.

### லிகிதர் பதவிகள்

ஆண்கள் [தற்காலிகம்]

1 சம்பளத்திட்டம்:-
302: 13:- 730 - 20x10-25x5-1055 (இத்துடன் உரித்துள்ள ஏனைய படிகளும் சேர்த்துக் கொள்ளப்படும்)

2 தகைமைகள்:-
அ) கூட்டுறவு வேலையாளரினது 14-வது சம்பளத்திட்டத்தில் லிகிதர் பதவியில் 2 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.
அல்லது
ஆ) க.பொ.த. (சாதாரண தரம்) வில் கணிதம்/வர்த்தகஎண்கணிதம் / எண்கணிதம் சிங்களம / தமிழ் பாஷை உட்பட 5 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

3 வயது:-
18—40

4 பிணை:-
உரொக்கம் ரூபா 5000/- தெரிவு செய்யப்படுபவர்கள் குறைந்தது 10 வருடங்கள் சேவை செய்யாது வேலையை விட்டு விலகிச்சென்றால் பிணைப்பணம் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது.

5 வசிப்பிடத் தகைமை:-
சங்க எல்லைப்பரப்பில் 10 வருடங்களுக்குக் குறையாமல்நிரந்தரமாக வசிப்பவராக இருக்க வேண்டும்.

6 முடிவுத்திகதி:-
2-12-92. ந.ப 12 மணி வரை

7 விண்ணப்பப்பத்திரங்கள்:-
ரூபா 2-00 செலுத்தி சங்கத்தில் வழங்கப்படும் விண்ணப்பபத்திரத்தில் பூர்த்திசெய்து அனுப்ப வேண்டும்.

குறிப்பு:-
தேவையான விடத்து அத்தாட்சிப்பத்திரப்பிரதி இணைக்க வேண்டும்.

வலி - கிழக்கு வடபகுதி ப. நோ. கூ. ச அச்சுவேலி

(சி-5463) (வரையறுக்கப்பட்டது)

வேண்டிய முகவரி: இல. 6 ராதர் ஒழுங்கை வண்ணார் பண்ணை. [3692]


பிறிமா பிறவுண் + கறுப்பு பேட்டுக் குஞ்சுகளும் கோழிக ளுக்கான மருந்துகளும் உடன் விற்பனைக்குண்டு. 'மல்லிகா பதி', சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (3223)


## மேலும் ஒரு தொலைக்காட்சி சேவை

(கொழும்பு)

எம் டி வி. தொலைக்காட்சி சேவையைப் போல விரைவில் மற்றுமொரு தனியார் தொலைக்காட்சிசேவை ஆரம்பிக்கப்பட இருப்பதாக இலங்கை முதலீட்டு சபையின் தலைவர் வட்டவல கூறியுள்ளார். அவர் மேலும் கூறுசையில் ஜப்பானின் ஒத்துழைப்புடன் இந்த சேவை நடத்தப்பட இருப்பதாகவும் குறிப்பிட்டார்.



10 — 1908    10 — 1992

## கந்தப்பர் - முத்துக்குமாரு

(இளைப்பாறிய ஆசிரியர்)

''மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி
இவன் தந்தை என்னோற்றான் கொல் எனும் சொல்''

கந்தப்பர்-முத்துக்குமாரு எனும் எம் குடும்பத்தலைவன் பிரியாவிடை பெற்றகன்ற வேளை எங்கள் விசனம் பகிர்ந்தோர், சுற்றத்தார், உற்றார், நண்பர், அனைத்து நலன் புரிந்தோர் யாவருக்கும் நன்றிகள் பற்பல.

அவரின் ஆத்மா சாந்தி அடைய புற்றளை மாமரத்தானை இறைஞ்சுகின்றோம்.

24-11-92 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்துகொண்டு அவரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

''நயினாவத்தை''
புலோலிதெற்கு,
புலோலி.    — குடும்பத்தினர்

(3676)


## ஆவரங்காலில் அமலன்...

எங்கள் சேவையின் தொடக்கம்!
உங்கள் தேவையின் நம்பிக்கை!!

★ நெல் குற்றவும் ★ தூள் அரைக்கவும்
★ அரிசி தீட்டவும் ★ உழுந்து திரிக்கவும்

நியாய விலையில் எங்கள் சேவை தொடர்கிறது
தரத்திற்கு நாடுங்கள்...

## "அமலன் கிறைன்டிங் மில்"

யாழ்/பருத்தித்துறை வீதி, ஆவரங்கால்

(சி-5458)


பொலிகை மண்ணில் 09 — 08 — 1975



பொலிகை மண்ணிற்காய் 24 — 11 — 199[illegible]

பொலிகை மண் பெற்றெடுத்த
காவிய நாயகி!

## 2-ம் லெப். பொன்னி

[செல்லமாணிக்கம் பிரமிளா - பாமா]

பொலிகண்டிச் சந்தி - பொலிகண்டி.

பாமா!!!
பொலிகை மண்ணிலே பிறந்தாய்!
பொலிகை மண்ணிலே வளர்ந்தாய்!
உன் அண்ணன் காட்டிய பாதையாய்!
விடுதலை தாகம் கொண்டு திரிந்தாய்!
வீர வரிப்புலியாய் எழுந்தாய்!
மாங்குளம் மண்ணிலே உன் குருதிச் சுவட்டைப்
- பதித்தாய் - பின்
மலர்ந்து திரிந்த பொலிகை மண்ணிலே சங்கம
- மாகினாய்!
ஈராண்டுகள் ஓடி மறைந்திட்டாலும் - எம்
இதயத்திலிருந்து ... . என்றும் - நீ
அழிய மாட்டாய்!!!

24. 11. 90 அன்று மாங்குளம் இராணுவ முகாம் தகர்ப்பின் போது காற்றோடு காற்றாய் கலந்துவிட்ட எம் காவியக் கண்மணி - 2ஆம் லெப். பொன்னி இவருக்கும் இவருடன் வீரச்சாவு எய்திய வீரமறவர்களுக்கும் எமது வீர அஞ்சலிகள்.

24 11. 92 இன்று பொன்னியின் நினைவாக தொண்டமானாறு முருகன் ஆலயத்தில் அபிஷேகமும், அன்னதானமும் நடைபெறும். சக போராளிகளையும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்களையும் அன்புடன் அழைக்கிறோம்.

(3665)    — குடும்பத்தினர்

## நினைவு கூருகின்றோம் ...

### 1992-11-24

1986-ம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய-

★ முத்துபண்டா செல்வம் (முறக்கொட்டாஞ்சேனை- மட்டு)

1990-ம் ஆண்டு வவுனியா- மதவாச்சி, கோமரசன் கடவையில் சிறிலங்காப்படையினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

கப்டன் நோயல் (சண்முகராஜா விக்னேஸ்வரன்- திரியாய்- திருக்கோணமலை)

2-ம் லெப் அத்தார் (இராசையா நவரட்ணம்- திரியாய்-திருக்கோணமலை)

அலெக்ஸ் (சிவநாயகம் ரஜனிகாந்- 55/04, கந்தசாமி கோயிலடி, உவர்மலை- திருக்கோணமலை)

நிமால் (முருகையா காந்தரூபன்- திருக்கோணமலை)

றிச்சாட் (பேரின்பராசா விஜயராசா- 2-ம்கட்டை நிலாவெளி - திருக்கோணமலை)

பீலிக்ஸ்|பீரிஸ் (கும்புறுப்பிட்டி - திருக்கோணமலை)

தந்திரி மலைப் பகுதியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

பிறின்ஸ்|ராஜன் (பெனடிக்ற் அருள்ராஜன்- 5-ம் வட்டாரம், விடத்தல்தீவு-மன்னார்)

மட்டக்களப்பில் இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்ட, மட்டு - ஐயங்கேணியைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

[சி/5455]

**சிந்தனைக்கு**

மனித வரலாற்றின் போக்கு, விண்ணில் நடப்பவற்றால் தீர்மானிக்கப் படுவதில்லை. மாறாக மனிதர் இதயங்களில் நடப்பவற்றால் தான் தீர்மானிக்கப்படுகிறது.

- ஸர் ஆர்த்தர் கீத்


ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம்- 24-11 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05


# தமிழ்க் குழுக்களின் 'நன்றிக் கடன்'

இனப்பிரச்சினை தீர்விற்கு வடக்கு - கிழக்கு இணைப்பு இன்றி வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு தனி மாகாணசபை உருவாக்கலாம் என்ற யாழ். மாவட்ட எம். பி. ஸ்ரீநிவாசன் முன் வைத்துள்ள யோசனைகளில் இன்று தென்னிலங்கை அரசியல் வாதிகளினதும், கொழும்புப் பத்திரிகைகளின் கவனமும் திரும்பியுள்ளது.

வடக்கு - கிழக்கு இணைப்பு இல்லாத ஒரு தீர்வுத் திட்டம் என்பதினாலேயே அவர்களின் கவனம் என்றுமில்லாதவாறு திசை திரும்பியுள்ளது. தென்னிலங்கைப் பேரினவாதப் பத்திரிகைகள் இத்தீர்வுத் திட்டத்தில் முன் வைக்கப்பட்டுள்ள ஒன்பது அம்சங்கள் குறித்தும், முதன்மைப் படுத்தத் தொடங்கி விட்டன. இத்தீர்வுத் திட்டம் முன் வைக்கப்பட்டுள்ளதன் மூலம், தமிழர் தாயகத்தைத் துண்டாடும் சிங்களப் பேரினவாதத்தின் குறிக்கோளின் ஒரு பகுதி நிறைவேற்றப்பட்டுள்ளமையே இவர்களின் இக் கரிசனைக்குக் காரணமாகும்.

முன்னர் ஒரு முறை இப் பகுதியில் கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களின் நிலை குறித்து குறிப்பிடும் போது 'தனி நாட்டிற்காக அன்று போராட்டம் நடத்துவதாகக் கூறிக்கொண்டவர்கள் இன்று மாகாணசபைகள் (வடக்கு - கிழக்கு இணைந்த) கோருகின்றார்கள். எதிர்காலத்தில் படிப்படியாக கீழ் இறங்கி மாவட்டசபை, கிராமசபை எனக் கோரினாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை' எனக் குறிப்பிட்டிருந்தோம்.

இன்று இந் நிலையே உருவாகியுள்ளது அண்மையில் தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைத்த ரெலோ குழு கிழக்கு மாகாணத்தில் சிங்களவர் ஆக்கிரமித்த பகுதியை அவர்களுக்கே தாரை வார்த்து விட்டு, பிரச்சினையைத் தீர்க்கலாம் என ஒரு ஆலோசனையை முன் வைத்தது. தற்பொழுது, யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்

# சிங்கப்பூருக்குள் தமிழர் செல்வது விரைவில் தடை செய்யப்படும்

(சிங்கப்பூர்)

சிங்கப்பூருக்குள் தமிழர் செல்வதைத் தடுக்க அந் நாட்டு அரசு விரைவில் சட்டம் ஒன்றை கொண்டு வரவுள்ளது.

சுற்றுலா வருவதாக கூறி அனுமதிக்கப்பட்ட காலத்துக்கு மேலாக அங்கு தங்கி சட்ட விரோதமாக சிங்கப்பூரில் வேலையும் பெற்றுவிடுகின்றனர் இச்சட்ட விரோத நடவடிக்கையில் பெரும்பாலும் இந்தியாவில் இருந்து வரும் தமிழர்களே ஈடுபடுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தடுக்கும் முயற்சியில் சிங்கப்பூர் அரசு தீவிரமாக செயற்பட்டு வருவதாகவும் இந்தியாவிலிருந்து வரும் குறிப்பாக தமிழர்களை தடுப்பதற்கான சில வரையறைகளை கொண்டு வருவதற்கு உத்தேசித்துள்ளது. இதற்கான அறிவிப்பு விரைவில் வெளியாகும் என சிங்கப்பூர் அரசு கூறியுள்ளது.

இதன்படி இந்த குறிப்பிட்ட பிரிவினர் சிங்கப்பூர் வருவதாக இருந்தால் சிங்கப்பூரில் உள்ள உறவினர்களோ, நண்பர்களோ மூவாயிரம் டொலருக்கான வங்கி உத்தரவாதம் விசா பெறுவதற்கு முன்னால் இதைச் செய்ய வேண்டும் என அறிவித்துள்ளது.

## அம்பாள் விக்கிரகம் தெருவுக்கு வந்தது

(குருநகர்)

பெருந்தொகையான பக்தர்கள் வழிபட்டு வந்த ஆலய விக்கிரகம் முதற்கொண்டு மற்றும் ஆலயத்திற்குரிய பொருள்கள் அனைத்தையும் நடுவீதியில் எடுத்துவைத்த சம்பவமொன்று கடந்த (19-11-92) வியாழன் யாழ். கந்தர்மடம் பகுதியில் நடைபெற்றுள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது கந்தர்மடம் அரசடிவீதி ரயில்வேக் கடவை கிழக்கு ஒழுங்கையில் பல வருடங்களாக பக்தர்களால் வழிபாட்டுக்கு உரியதாக இருந்து வந்த செல்வநாபூஷணி அம்பாள் ஆலயம் அமைந்துள்ள காணி வவகாரம் அம்பாளையும், ஆலயப் பொருட்களையும் காணிச் சொந்தக் காரர்களால் வீதிக்குக் கொண்டுவர நேர்ந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. சமீபகாலங்களில் மேற்படி ஆலயத்தில் பக்தர்களின் கூட்டமும், வழிபாட்டு நிகழ்ச்சிகளும் அதிகரித்து வந்தது காணி பறிபோய் விடும் என்ற நிலையை ஆலய வளவுச் சொந்தக் காரர்களுக்கு ஏற்படுத்தியதை தொடர்ந்தே அம்பாள் விக்கிரகம் வீதியில் எடுத்து வைக்கப்பட்டதாக நம்பப் படுகிறது

இந்நிகழ்ச்சியை அடுத்து அம்பாளைவழிபட்டுவந்தவர்களும் ஆதரித்து வந்தவர்களும் சேர்ந்து அவ்விடத்திலேயே வேறொரு காணியில் உடனடியாக அம்பாளுக்கு புதிய ஆலயம் கட்டுவதற்கும் நடவடிக்கைகள் மேற் கொண்டு வருகின்றனர். (21)

## "வெளிச்சம்" இன்று வெளிவருகிறது

மாவீரர் நினைவாக 'வெளிச்சம்' கார்த்திகை மாத இதழ் இன்று வெளிவருகின்றது.

தாயகத்தின் சுதந்திரத்துக்காகவும், தமிழ் மக்களின் வாழ்வுக்க வும் தற்கொடை ஈகம் புரிந்த மாவீரர்கள் பற்றிய விடயங்களை உள்ளடக்கி இந்த இதழ் வெளிவருகின்றது.

இந்த இதழில், தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் மாவீரர்கள் பற்றிய உணர்ச்சிபூர்வமான கருத்துக்களும், புதுவை இரத்தினதுரை, மாரிக்கிரட் ரூபி, மு. வே. யோ. வாஞ்சிநாதன், வேலணையூர் சுரேஸ் ஆகியோரின் கவிதைகளும், தேவர் அண்ணா. கரும்பறவை, செல்வி சாந்தி ஆகியவர்களின் போராட்ட நிகழ்வுகள் பற்றிய கட்டுரைகளும், சாந்தன், வசந்தன் ஆகியோர்களின் சிறுகதைகளும் சோ. பத்மநாதனின் விமர்சனம் ஒன்றும் இன்னும்பலவிடயங்களும் இடம்பெற்றுள்ளன.

## 5 தமிழக வாசிகள் கைது

(சென்னை)

வேதாரணியம் அருகே கைது செய்யப்பட்ட நான்கு இலங்கைத் தமிழ் இளைஞர்களோடு தொடர்புடையவர்கள் எனக் கூறப்படும் ஐந்து தமிழக வாசிகளை தமிழகப் பொலிஸார் கைது செய்துள்ளனர் இவர்களைக் கைதுசெய்யச் சென்ற காவல்துறையினரை இவர்கள் தாக்கியதையடுத்து பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இருவர் கத்திக்குத்துக் காயங்களுக்கு இலக்காகினர்.

முன்னதாக இந்த இலங்கைத் தமிழர் நால்வரும் பெற்றோல் மற்றும் என்ஜின்ஒயில் போன்றவற்றை இலங்கைக்கு கடத்த முயன்றதாக குற்றம் சாட்டப்பட்டு இருந்தது தெரிந்ததே.

## ஆண்டு1-க்கான அனுமதி

யா/கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் ஆண்டு 1 வகுப்பிற்கான அனுமதி விண்ணப்பங்கள் 1992 மார்கழி 31-ம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படும் என்றும், அதற்குப்பின் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்றும் அதிபர் அறிவித்துள்ளார். (24)

## சேவைநலம் பாராட்டு

(வடமராட்சி)

பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆசிரியராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றதையிட்டு திரு காசிநாதர் ஆசிரியருக்கு அதிபர் திருமதி ஸ்ரீசிவராசா தலைமையில் சேவைநலம் பாராட்டு வைபவம் நடைபெற்றது. (யோ)

## காலத்தை வென்றுமே காவியமாகினர்

விடுதலைப் பயிருக்கு உரமாய் ஆனவர்
விலங்கினை அறுக்கவே களத்தினில் ஆடினர்
கெடுதலை செய்திடும் தாயக மண்ணில்
கால்களை மிதித்த அயவரை மாய்த்தனர்

நெருப்பிலும் நீரிலும் நீந்தி மிதந்தனர்
நீசரின் பாசறை தேடி அழித்தனர் - தமிழ்
விருப்பிலே தக்க சேனை நடத்தியே
விடுதலை தீயினில் உடல்களை எரித்தனர்

குண்டு மழையிலும் கொள்கையில் நின்றார்
குருதி வெள்ளத்தில் குளித்துமே எழுந்தார்
நீண்டு கிடக்கின்ற தாயக மண்ணை
நேசமுடனே முத்தமிட்டே மாவீரர் மடிந்தார்

குருதியில் நின்றுமே காவியம் படைத்தவர்
கொண்ட கொள்கையே மூச்சென நிமிர்ந்தவர்
கருகி எரியினும் தாயகம் என்றவர்
காலத்தை வென்றுமே காவியம் ஆகினர்.

அரியாலையூர் - கேந்திரன்

## பாடசாலை, படிப்பகம் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

இன்று மாவீரர் வாரத்தையொட்டி பூநகரிப் பகுதியில் பல்வேறு இடங்களிலும் பாடசாலை, படிப்பகம் என்பன திறக்கப்படுவதுடன் அஞ்சலிக் கூட்டமும் நடைபெற உள்ளன.

காலை 9.00 மணியளவில் சாமிப்புலம் படிப்பகமும், காலை 10.00 மணியளவில் நல்லூர்பாலர் பாடசாலையும் காலை 11.00 மணியளவில் ஆலங்கேணிபாலர் பாடசாலையும், காலை 11.45 மணியளவில் ஆலங்கேணி படிப்பகமும், பிற்பகல் 1.30 மணியளவில் செல்வபுரம் பாலர் பாடசாலையும் பிற்பகல் 2.00 மணியளவில் செல்வபுரம் பாடசாலை மண்டபமும், பிற்பகல் 3.00 மணியளவில் தம்பிராய் பாலர் பாடசாலை என்பனவும் திறந்து வைக்கப்படவுள்ளதுடன் அஞ்சலிக் கூட்டமும் நடைபெற உள்ளன.

## பாய்க்கப்பல் அமைப்பில் மாவீரர் பந்தல்

பண்டைய காலத்தில் தமிழன் போருக்கு பயன்படுத்திய பாய்க்கப்பலின் தோற்றத்தைப் போன்று அமைக்கப்பட்ட பந்தல் ஒன்று, இன்று பிற்பகல் 4 மணிக்கு பருத்தித்துறையில் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளது

தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களால் பருத்தித்துறை பழைய பஸ் நிலைய மைதானத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது. இக்கப்பலில் தமிழீழ விடுதலை கடற்புலிகள் 92 மாவீரர்களின் உருவப் படங்களும் வைக்கப்படவுள்ளன.

## கோட்ட ரீதியாக 4-ம்நாள் மாவீரர் வாரக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் வாரத்தை முன்னிட்டு கோட்டமட்டத்தில் நான்காவது நாளாக நடைபெறும் கூட்ட விபரங்கள்.

வலிகாமம் கோட்டத்தில் நல்லூர் வட்டத்தில் கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாசாலையிலும், உடுவில் வட்டத்தில் இணுவில் பரராசசேகர பிள்ளையார் கோயிலிலும் இரவு 7.30 மணியளவில் கூட்டம் நடைபெறவுள்ளது:

தமிழன் தலைமையில் இரவு 7.00மணியளவில் கூட்டம் நடைபெற உள்ளது.

வடமராட்சிக்கோட்டத்தில் சிவன்கோவிலில் இரவு 7.30 மணியளவில் திரு பைந்தமிழன் தலைமையிலும், தீவகம் கோட்டத்தில் இரவு 7.30 மணியளவில் யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயத்தின் அம்பிகைப்பாகன் அரங்கிலும் கூட்டம் நடைபெற உள்ளது.

கடற்புலிகளினால் வலிகிழக்கில் பும்புகார் பாடசாலை

# ஜம்மு-காஷ்மீர் செல்வதற்கு மன்னிப்புச் சபைக்கு தடை

-எஸ். பி.சவான் அறிவிப்பு

தற்பொழுது, யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநிவாசன் வடக்கு - கிழக்கைப் பிரிப்பதன் மூலம் இனப்பிரச்சினையைத் தீர்க்கலாம் எனத் திட்டம் வகுத்துள்ளார்.

நால்வருக்கு ஒரு 'கட்சி',; கட்சியில் உள்ளவர்கள் எல்லோரும் தலைவர்கள், தொண்டர்களே இல்லை என்ற ரீதியில் கொழும்பில் சிறிலங்கா அரசாங்கத்தின் தயவில் வாழ்ந்து வரும் இத் தமிழ்க் குழுக்கள் முன் வைக்கும் தீர்வுத் திட்டங்கள் எந்தளவில் தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்படும், எந்தளவிற்கு நடைமுறைச் சாத்தியப் பாடானவை என்பவை எல்லாம் ஒரு புறம் இருக்க தமிழ்க் குழுக்கள் தமது நலனுக்காக சிங்கள பேரினவாதத்திடம் தமிழர் தாயகத்தை காட்டிக் கொடுக்கும் திட்டத்தை வெளியிட்டுள்ளார்கள் என்பதே முக்கியமானதாகும்.

இதேவேளை, தமிழ்க் குழுக்களின் இக் காட்டிக் கொடுப்பிற்கு உறுதுணை வழங்க முஸ்லிம் எம். பிக்களும் போட்டி போட்டுக் கொண்டு ஆதரவு தெரிவித்துள்ளனர். இக் காட்டிக் கொடுப்புத் திட்டத்தை நிபந்தனையுடன் ஏற்றுக் கொள்ள இவை முன் வந்துள்ளன. இதன் பிரகாரம் இவ் யோசனையை பிரதான அரசியற் கட்சிகளும், பெரும்பான்மை மக்களும் ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் தாமும் ஏற்றுக் கொள்வதாக நீதி அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீத்தின் தலைமையில் கூடிய முஸ்லிம் எம். பிக்கள் தெரிவித்துள்ளனர். இதன் மூலம் மீண்டும் ஒரு முறை அவர்கள் சிங்களப்பேரினவாதத்திற்கு தமது விசுவாசத்தைக் காட்டியுள்ளனர்.

தமிழ்க் குழுக்களின் இக் காட்டிக் கொடுப்பானது இராணுவத் தோல்விகளைத் தொடர்ந்து சந்தித்து வரும் சிங்கள பேரினவாத அரசாங்கத்திற்கு பெரும் ஆறுதல் அளிக்கும் ஒன்றாகும். இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமாகப் போவதில்லை என்பதனை சிங்கள அரசு உணரத் தலைப்பட்டுள்ள வேளையில், வடக்கு - கிழக்கு இணைப்பற்ற தீர்விற்கு தமிழ்க் குழுவினர் முன் வந்திருப்பது பிரச்சினையால் அமிழ்ந்து போகும் சிங்கள அரசிற்குகைகொடுத்து கரையேற்றி விட மேற்கொள்ளப்படும் முயற்சியாகும். இதனை ஒரு வகையில், தமிழ்க் குழுக்களின் 'நன்றிக்கடன்' என்றும் சொல்லலாம்.

## -எஸ். பி.சவான் அறிவிப்பு

(டில்லி)

இந்தியாவின் சர்ச்சைக்குரிய மாநிலமான காஷ்மீருக்குசர்வதேச மன்னிப்புச்சபை விஜயம் செய்வதை இந்தியா தடை செய்யும்என மத்தியஉள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் தெரிவித்ததாக பி ரி ஐ. ஸ்தாபனம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் சர்வதேச மன்னிப்புச் சபையின் தூதுக் குழுவுடனான சந்திப்பின் இறுதியில் பேசிய சவான் ''சர்வதேச மன்னிப்புச் சபை பஞ்சாப்புக்கு விஜயம் செய்வதில் ஆட்சேபனை இல்லை, ஆனால் எடபோது விஜயம் செய்வது என்பதனை நாமே தீர்மானிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தியப் படையினர் பாரதூரமான அளவுக்கு மனித உரிமைகள் மீறப்படுவதாக கூறப்படும் பஞ்சாப் மாநிலத்திற்கு விஜயம் செய்ய அனுமதிக்குமாறு சர்வதேச மன்னிப்புச்சபை இந்திய அரசிடம் கோரியிருந்தது.

''எமது கவனத்திற்கு கொண்டு வரப்படும் மனித உரிமை மீறல் குறித்து நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம் ஆனால் அதே வேளை நெருக்கடியான சூழ்நிலையில் கடமையில் ஈடுபட்டிருக்கும் பாதுகாப்புப் படையினரின் உற்சாகத்தையும், உணர்வையும்கேவலப்படுத்தக் கூடிய எந்தக் காரியத்தையும் செய்யக் கூடாது''எனவும் சவான் குறிப்பிட்டுள்ளார்.

## உலகில் நூறுகோடி பேர் பட்டினியால் பாதிப்பு

உலகில் வசிக்கும் மக்களில் நூறு கோடி மக்களுக்கும் அதிகமானோர் பட்டினியுடன் வாழ்கின்றனர் அல்லது ஊட்டச்சத்துக் குறைவினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நேற்று இவ் ஸ்தாபனம் ஜெனீவாவில் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்நிலைமையை சமாளிப்பதற்கு சர்வதேச அளவில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளது.

வளரும் நாடுகளில் பரவும் நோய்களுக்கும் அவை காரணமாக நிகழும் இறப்புக்களின் அதிகரிப்புக்கும் ஊட்டச்சத்துக்குறைவு தான் காரணமென அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## வின்ட்ஸர் மாளிகையில் தீவிபத்து; பொருள்கள் சேதம்

(லண்டன்)

850 வருட காலமாக பிரிட்டிஷ் அரச குடும்பத்தினரின் பிரதான வாசஸ்தலமாக இருந்த பிரிட்டிஷ் எலிஸபெத் மகாராணியாரின் வின்ட்ஸர் மாளிகை கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட பாரிய தீவிபத்தினால் விலை மதிப்பற்ற பல பொருள்களும் புராதன கலைப் பொக்கிஷங்களும் சேதமடைந்தன

சுமார் 180 தீயணைப்புப் படை வீரர்களின் பெரும் பிரயத்தனத்தின் மத்தியில் சுமார் நான்கு மணித்தியாலத்தின் பின் தீ கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிலைமையை அறிந்து ஸ்தலத்துக்கு விரைந்த எலிசபெத் மகாராணியார் விலை மதிப்புள்ள சிற்பங்களும், ஓவியங்களும், மற்றும் கலைப் பொக்கிஷங்களும் தீயினால் சேதமடைந்ததைக்கண்டு அதிர்ச்சியடைந்து மனநிலை பாதிப்படைந்த நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தீமூண்ட தருணம் மாளிகையில் இரண்டாவது மகனான இளவரசர் அன்ட்ரூ இருந்தார். இவ்விபத்தால் எவருக்கும் காயமேற்படவில்லை.

## ஐ. நா. விற்கு மேலதிக நிதி

ஐ. நா. தனது பணியை திறம்பட ஆற்றுவதற்கு அதில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகள் அதிக அளவில் நிதிவழங்க வேண்டுமென ஐ. நா.வின் செயலாளர் பூட்டர்ஸ், காலி கேட்டுக்கொண்டுள்ளார்.

## போர்க்கைதிகள் விடுதலை ஈராக்கிடம் வற்புறுத்து

குவைத் போர்க் கைதிகளை விடுதலை செய்வதுடன் ஐ. நாவின் நிபந்தனைகளைக் கடைப்பிடிக்குமாறு ஆறு உறுப்பினர் கொண்ட வளைகுடா ஒத்துழைப்புச் சபை ஈராக்கிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

குவைத்தில் கூடிய சபையின் உள்துறை அமைச்சர்கள் குவைத்மீது ஈராக் மீண்டும் உரிமை கோரத் தொடங்கியுள்ளதனை அடுத்து அந்தப் பகுதி பாதுகாப்பிற்கு ஈராக் ஒரு அச்சுறுத்தலாக இருப்பதாகக் குற்றம் சாட்டினர்.

சவுதி அரேபியா, குவைத், ஐக்கிய அரபு எமிரேற்றுக்கள், ஓமான், பாரேன் ஆகிய நாடுகளின் அமைச்சர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

ளது:

தென்மராட்சிக் கோட்டத்தில் எழுதுமட்டுவாள் சிறி கணேசா பாடசாலையில் கொடிகாமம் வட்டப்பொறுப்பாளர் திரு. விபுலன் தலைமையிலும், நாவற்குழி மகா வித்தியாலயத்தில் கைதடி வட்டப்பொறுப்பாளர் திரு. ...க்கில் பூம்புகார் பாடசாலை முன்றலிலும், வடமராட்சி வடக்கில் பழைய பருத்தித்துறை பஸ் நிலையத்திலும், வடமராட்சி கிழக்கில் மணற்காடு தமிழ்க்கலவன் பாடசாலையிலும் கூட்டம் நடைபெற உள்ளது.

## மாவீரர்களின் பெற்றோர் கரவெட்டியில் கௌரவிப்பு

[கரவெட்டி]

கட்டைவேலி வாழ் மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்குமுகமாக ஊர்வல அழைப்பும், பாராட்டு விழாவும் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

பகல் 11.30 மணியளவில் ஆரம்பமாகும் மேற்படி ஊர்வல அழைப்பின் போது கோயிற்கடவைப் பிள்ளையார் கோவில் முன்றலிலிருந்து மாவீரர்களின் பெற்றோர்கள் ''பான்ட்'' வாத்திய சகிதம் ஞானசாரியார் கல்லூரி வரை அழைத்துவரப்படுவர் விடுதலைப்புலிகளின் வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு அரசண்ணா, வடமராட்சி மாவீரர் செயலகப் பொறுப்பாளர் திரு. மணிவண்ணன், திரு. ரூபன்ராஜ், திரு ஆ வி தங்கராசா (ஓய்வுபெற்ற கல்வி அதிகாரி) திருமதி பத்தினிப்பிள்ளை வல்லிபுரம்(ஓய்வு பெற்றஆசிரியை) ஆகியோரின் தலைமையில் நடைபெறும் இவ்வூர்வல அழைப்பின் முடிவில் யா/கட்டைவேலி ஞானாசாரியார் கல்லூரியின் பாராட்டு விழா நடைபெறும்.

பிரதி அதிபர் திரு ஆ. கந்தையா தலைமையில் நடைபெறும் மேற்படி பாராட்டு விழாவில் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் பலரும் உரையாற்றவுள்ளனர். (06)

---

## மாவீரர் விழா

சங்கானை வட்டவைப் பிரதேசக் கூட்டுறவாளர் நடாத்தும் ''மாவீரர்தின விழா'' நாளை புதன் கிழமை யாழ். சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் நடைபெற உள்ளது.

இவ் விழாவில் கூட்டுறவுச் சங்க அதிகாரிகளும், விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களும் கலந்து கொண்டு உரையாற்ற வுள்ளனர் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற உள்ளன.

---

## மாவீரர் செய்திகளில் படையினர் ஆர்வம்

வவுனியா நகரம் செல்வதற்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான பயணிகள் மட்டுமே இராணுவத்தினரால் அனுமதிக்கப்படுகின்றனர்.

மேலதிக பயணிகள் இராணுவத்தினரால் திருப்பி அனுப்பி வைக்கப்படுகின்றனர்

இதேசமயம், வடபகுதியில் இடம்பெறும் மாவீரர் வார நிகழ்வுகளை அறிந்து கொள்வதில் படையினர் ஆர்வம் காட்டி வருகின்றனர்

தென்பகுதி நோக்கிச் செல்லும் பயணிகளை துருவித் துருவி இராணுவம் விசாரணை செய்கின்றது. (தி)

ஈழநாதம்

# வாணிபம் தொழில் முயற்சி பதிவு செய்ய காலம் நீடிப்பு

தமிழீழத்தின் வடபகுதியில் வாணிபம் மற்றும் தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோர் அனைவரையும் தமிழீழ விடுதலைப் புலிகள் நிதித்துறையில் பதிவு செய்து கொள்ளும்படி உதவி அரசாங்க அதிபர் பிரிவு வாரியாக வழங்கப்பட்டிருந்த காலம் 30-11-92 வரை நீடிக்கப்பட்டுள்ளது. ஆகவே இதுவரை பதிவு செய்யாதவர்களை இவ் வாய்ப்பைப் பயன்படுத்திப் பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக்கொள்வதுடன், பதிவு செய்யாத எந்தவொரு வாணிபமும், தொழில் முயற்சியும் தொடர்ந்தியங்க இசைவளிக்கப் படமாட்டாது என்பதையும் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம். இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் நிதிப் பொறுப்பாளர் செ. தமிழேந்தி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் இதற்குரிய படிவங்கள் 24-11-92 முதல் 30-11-92 வரை (27-11-92 தவிர) காலை 9 00 மணிமுதல் மாலை 5 00 மணிவரை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள யாழ். மாவட்ட வருவாய்ப்பகுதிச் செயலகத்தில் மட்டுமே வழங்கப்படும் என்பதையும், முன்போல் தென்மராட்சி, வடமராட்சி உப செயலகங்களில் வழங்கப் படமாட்டாது என்பதையும் அறியத்தருகிறோம்.

தனியார் கல்வி நிறுவனங்களும் 30-11-92ற்கு முன் பதிவு செய்துகொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

வாணிபம் என்பது கொள்வனவு, விற்பனையில் ஈடுபட்டுள்ள நிரந்தர வாணிபர்களை மட்டுமல்லாது நடமாடும் வாணிபர்கள், தரகர்கள், முகவர்களையும் உள்ளடக்கும்.

தொழில் முயற்சி என்பது உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள உற்பத்திச் சாலைகள், உயர்தொழில் / கண்ணியத் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களை மட்டு மல்லாது அத் தொழிலில் ஈடுபட்டுள்ள தனி ஆட்களையும், போக்குவரத்துச் சேவை, பிரயாணச் சேவை ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளோரையும் உள்ளடக்கும் என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகள் பற்றி தகவல் தரின் பெருந்தொகை சன்மானம்

### பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் என சந்தேகிக்கப்படும் நபர்களின் நடமாட்டம் தொடர்பான தகவல்கள் தருபவர்களுக்கு பெருந்தொகைப்பணம் சன்மானமாக வழங்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

கொழும்பில் மேலும் குண்டு வெடிப்புக்கள் நிகழலாம் என்ற பீதியும், அச்சுறுத்தலுமே இதற்கு காரணமாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## கூட்டுறவுச் சங்க மாவீரர்தின நிகழ்வு

(வடமராட்சி

உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ப. நோ. கூ. ச பணிமனையில் சங்கத் தலைவர் திரு. சி. கணபதிப்பிள்ளை தலைமையில் எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை பி. பகல் 3 மணிக்கு மாவீரர் தினம் நடைபெறவுள்ளது.

தமிழீழ கடற்பிராந்தியத் தளபதி திரு தி சூசை. வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. சு. அரசண்ணா. திரு மு. வே. யோ. வாஞ்சிநாதன் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவர்.

அதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (யோ)

## இன்று

பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் பிற்பகல் 2-15 மணி தொடக்கம் 3-30 மணி வரை பருத்தித்துறை, வடமராட்சி கிழக்கு உ. அ. அ. பிரிவுகளுக்கும், 3-30 மணி தொடக்கம் 4-30 மணி வரை கரவெட்டி உ. அ. அ. பிரிவை சேர்ந்தவர்களுக்கும் மீளளிப்பு இடம்பெறவுள்ளது.

## பிடிபட்டனர்

வவுனியா சாஸ்திரி கூழாங்குளம் பகுதியில் உள்ள சிவன் கோவில் உண்டியலில் உள்ள பணத்தைப் பட்டப் பகலில் திருடி தலைமறைவாகுவதற்கு எத்தனித்தவர்களே வசமாக மாட்டிக் கொண்டனர்.

## சுழிபுரத்தில்

கணைகள் வீழ்ந்து வெடித்ததையால் மு. தவத்துரை (வயது 40), பு. ஆனந்தன் (வயது 42), அ. தவமணி [வயது 48), இ தவமணி (வயது 42) ஆகியோர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். ப. தியாகராசா. (வயது

## தமிழீழ மக்களே!

இனிய ஈழம் மலரும் - நம்
புதல்வர் கனவு பலிக்கும்
புரட்சிக் கனலும் வெடிக்கும் - இங்கு
புதிய நாடு பிறக்கும்

(மாவீரர் நாள் - 1992 சுவரொட்டிகள் பதாதை வசனங்கள்)

## கடற்படை அதிகாரிகள் பலர் டிசம்பரில் பதவி உயர்வு பெறுவர்

(கொழும்பு)

டிசம்பர் முதல் வாரத்தில் சிறிலங்கா கடற்படைத் தலைமைப் பதவிகளில் பல மாற்றங்கள் இடம்பெற இருப்பதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பத்தாயிரம் பேர்கொண்ட கடற்படையில் சுமார் இருபது சிரேஷ்ட அதிகாரிகள், அவர்கள் தற்போது வகிக்கும்பதவிகளிலிருந்து வேறுபதவிகளுக்கு மாற்றப்பட விருப்பதாக அச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. பிரதம படை அதிகாரியாகக் கடமையாற்றிய மோகன் சமரசேகரா கடற்படைத் தளபதியாக நியமனம் பெற்றதை அடுத்து தற்போதைய கிழக்குப் பிராந்திய கடற்படைத் தளபதியாகக் கடமையாற்றும் கொமடோர் சிசில் திசேரா அவரின் இடத்துக்கு பிரதம படை அதிகாரியாக மாற்றம் பெறஉள்ளார். இந்த மாற்றம் இம் மாத முடிவிற்குள் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதே வேளை. கடற்படை நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாயிருக்கும் இரு சிரேஷ்ட - கப்டன்களானதயா சந்தகிரி மற்றும் டி.கே. தசநாயக்கா டிசம்பர் முதலாம் திகதி கொமடோர் தரத்துக்குப் பதவி உயர்வு பெற உள்ளனர் இப்பதவி உயர்வுடன் கப்டன்தயா சந்தகிரி இடம்மாற்றம் செய்யப் படுவாரா என்பது ஊர்ஜிதமாகவில்லை.

கடற்புலிகளின் எதிர்ப்பைச் சமாளிக்கும் நோக்கத்துடன் வடக்கு, கிழக்கு மற்றும் மேற்கு கடற்பிராந்திய கடற்படை கட்டுப்பாட்டு அமைப்பில் வைஸ் அட்மிரல் சமரசேகரா பல மாற்றங்களைச் செய்வார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## யாழ். கோட்டை

லும் எழுதப்பட்டிருக்கிறது.

கோட்டையின் முன் மண்டபத்தில் வீரச்சாவடைந்த சுமார் 66 போராளிகளது உருவப்படங்கள் இரு மருங்கிலும் வைக்கப்பட்டிருக்கின்றன. இருபக்கச்சுவர்களிலும் போராளிகளதுஎழுச்சியூட்டும் கோசங்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

கோட்டையின் பிரதான மைதானத்தில் சிதைக்கப்பட்ட கோட்டையின் சற்களால் அமைக்கப்பட்ட விசேட மேடையில் சுமார் 20 அடி உயரமான சிவப்பு, மஞ்சள் வர்ண கம்பம் ஒன்றில் தேசியக் கொடி ஏற்றப்பட்டு காற்றில் அசைந்து ஆடியவண்ணமிருக்கிறது.

யாழ். கோட்டை தற்பொழுது மக்களின் பார்வைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

## நள்ளிரவில் அகோர ஷெல் வீச்சு

[தெல்லிப்பழை]

சிறிலங்காஇராணுவ முகாம்களில் இருந்து நள்ளிரவு வேளை மக்கள் குடியிருப்புக்களை நோக்கி அகோர எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது

இரவு 12மணி முதல் பலாலி காங்கேசன்துறை இராணுவ முகாம்களிலிருந்து சுமார் 50 ற்கு மேற்பட்ட எறிகணைகள் இவ்வாறு இராணுவத்தால் ஏவப்பட்டது இவற்றால் ஏற்பட்ட சேதவிபரம் உடனடியாகத் தெரியவில்லை.

## கப்.அக்காச்சி குடியிருப்பில் மாவீரர் வார விழா

இன்று பி. ப. 4-00 மணிக்கு வாதரவத்தை அக்காச்சி கிராம மைதானத்தில் மாவீரர் வார விழா திரு சிறிக்குமார் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில், பொதுஸ்தாபனம், பாடசாலை ஆகியவற்றின் பிரதிநிதிகளும், தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் கருத்துரையும் எழுச்சியுரையும் வழங்குவார்கள். மேலும் கலை நிகழ்ச்சியும் நடைபெறும்

## இலங்கை முழுவதிலுமுள்ள முப்படைகளும் உஷார் நிலை

[கொழும்பு]

முப்படைகளும், பொலிஸாரும் 'நாடு தழுவிய' உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என்று அதிகார பூர்வமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அனைத்துப் படைப் பிரிவுகளும் முழுக் கவனத்துடன் செயற்படும் வகையில் உச்ச உஷார் நிலையில் இருக்கும்படி கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஆளுங் கட்சி அரசியல் வாதிகள், உயர் அதிகாரிகள் சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரிகளின் பாதுகாப்புக்குப் பொறுப்பாகவுள்ள பாதுகாப்பு அணிகளின் ஆள் பலமும் ஆயுதப் பலமும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை கொழும்பு நகரின் பல பகுதிகளில் ஆயுதந் தாங்கிய படைகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## மக்கள்

## பரீட்சை பின்போடப்பட்டது


## மண்ணிற்காய் மரணித்த மாவீரரின் இப்புனித வாரத்திலேயே!

நாமும் ஒரு வருடத்தினை நிறைவுசெய்கின்றோம். இக் குறுகிய காலத்தில் பெரும் வளர்ச்சியடைய உறுதுணையாக இருந்த அன்பர்கள் அனைவருக்கும் எமது உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சகல தமிழ் ஆங்கில,


★ புத்தகங்கள்
★ சஞ்சிகைகள்

ஆகியவற்றை நியாயவிலையில் பெற்றுக் கொள்ளவும், தாங்கள் படித்து முடித்துவிட்ட புத்தகங்கள் சஞ்சிகைகளை நியாய விலையில் விற்பனை செய்யவும், இன்றே வாருங்கள்

**யாழ். பழைய புத்தகக்கடை**

அருச்சுனா [ஸ்ரான்லி] வீதி,
(விவேகானந்தா அச்சக முன்பாக)
யாழ்ப்பாணம்.

(3690)

## "மாவீரர் வார சிந்தனை"

"இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்தமண் என்னைப் பிறப்பித்தது. நான் நேசிக்கும் எனது மக்களைப் பிறப்பித்தது."

"இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்தமண் என்னை வாழவைக்கிறது. எனது வாழ்விடமாய்த் திகழ்கிறது."

(3690) யாழ்ப்பாணம்.


## 90-ம் நாள் நினைவஞ்சலி

வீர ஜனனம் 14 — 02 — 1965



வீரச்சாவு: 27 — 08 — 1992

## லெப். கேணல் ராஜன்

**(சோமசுந்தரம் சற்குணம்)**

(முன்னாள் யாழ். மாவட்டத் தளபதியும், சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படைப்பிரிவின் சிறப்பு தளபதியும், அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரி பொறுப்பாளரும்)

இருவழி மழையென இருதயப்புனல்தனைப் பெய்தோன்
கருவிழி இழந்தொரு கடுநிலை வரினும் பகைத்தலை
தனைக் கொய்வோன்
சிறகினை இழந்தொரு கிளிநிலை கற்கா(து) - வரிப்
புலியென எழுந்தொரு புதுப்புறம்பல படைத்தோன்.

பகைக்குகை குதறிடப் பணிப்புரை வழங்கும் வாயன்
பைந்தமிழ்ப் புலிக்கொடி உடை(ய) ராஜன்.
சுற்றுப்பகை முற்றிப்பலம் பொங்கிவரும் போதும் -இவன்
வெற்றித்தோழ் கண்டிட பகைவெக்கித்தலை வீழும்

[இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய போராளிக ளுக்கும் வீர அஞ்சலி உரித்தாகுக]

மாதகல் துறை, மாதகல். — குடும்பத்தினரும், போராளி களும், நண்பர்களும்.

[3695]



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


னர். ப. தியாகராசா, (வயது 42) என்பவர் பலத்த காயமடைந்த நிலையில் மருத்துவமனைக்கு எடுத்து வரப்பட்டு பின் அங்கு மரணமடைந்துள்ளார்.

இத்தாக்குதலில் பி. பிரதீபன் (வயது 0), பி. சிவநேசன் (வயது 22), கே. ஞானசேகரம் (வயது 14). ஏ. தர்மரத்தினம் (வயது 27), ஆர். செல்வரத்தினம் (வயது 17), என். சிவகுமார் (வயது 13) ஆகியோர் உட்பட பத்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். இத்தாக்குதலினால் மேற்படி பகுதிகளில் காணப்பட்ட பல பொதுமக்களது வீடுகள் பலத்த சேதமடைந்தது.

(க) (ச) (பா) (நி)

### மெரினாவில்

அரிசி மூடைகள் தரைப்பகுதியிலும் மா மூடைகள் மேற்பகுதியிலும் அடுக்கப்பட்டுள்ளன. மா மூடைகளைத் தவிர்த்து அரிசி மூடைகளை எடுப்பது கடினமாக இருப்பதினால் குறிப்பிட்ட சில மா மூடைகளை இறக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக அக்குழு வட்டாரங்கள் மூலம் தெரியவந்தன.

இக்குழு கப்பலில் எடுத்து வரப்பட்ட மா, அரிசி போன்றவற்றின் மாதிரி வகைகளை தம்முடன் எடுத்துவந்தனர். இக்குழு கப்பலில் இருந்து திரும்பியதும் உணவுப் பொருள்கள் இறக்கும் வேலை ஆரம்பமாகின.

இக்குழுவில் சுகாதாரத் திணைக்களம், ஆர். டி. எச்., சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் பலரும் அடங்குகின்றனர்.

இறக்கப்படுகின்ற மாமூடைகளை தனிமைப்படுத்தி வைக்கப்படுவதோடு அது சம்பந்தமாக அரசாங்கத்திற்கு தெரியவைக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (யோ)

### மக்கள்

உன்னதமான இலட்சியம் விடுதலை ஆகும். இந்த உன்னத இலட்சியத்திற்காகவே எமது போராளிகள் சாவைச் சந்திக்கின்றார்கள். அடிமையாக வாழ்வதை விட சுதந்திரத்திற்காக மரணிப்பதில் அர்த்தம் உண்டு என்பதை உலகிற்கு உணர்த்துகின்றார்கள். இந்தச் சாவுகள் சாதாரண சாவுகள் அல்ல. சோகமான தனிமனித நிகழ்வுகள் அல்ல. இவை ஒரு புனிதக் குறிக்கோளுக்காக மனிதன் படைக்கும் அற்புதமான காவியங்களாகும். விடுதலைக்காக மரணிப்பவன் வரலாற்று நாயகன் ஆகின்றான்.

தமிழீழ சமுதாயம் கிட்டத்தட்ட 500 ஆண்டுகள் வரை அடிமை வாழ்வில் புரண்டு வருகின்றது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், சிங்களவர், இந்தியர்கள் என்ற வகையில் பல கட்டங்களில் பலவடிவங்களில் அடக்குமுறை எமது சமூகம் மீது திணிக்கப்படுகிறது. இந்த 500 ஆண்டு கால அடக்குமுறை வரலாற்றில் புலிகள் இயக்கத்தின் தோற்றமும், வளர்ச்சியும், வீரம் செறிந்த போராட்டமும் மகத்தான புதிய சகாப்தத்தைப் படைத்து ஆண்டாண்டு காலமாக தூங்கிக் கிடந்த தமிழீழ மண்ணில் ஆயுதப் போராட்டம் வெடித்தது.

புலிகளின் துப்பாக்கி வேட்டில் தமிழ்த் தேசிய ஆன்மா விழித்துக் கொண்டது தேசிய விடுதலை வரலாற்றுச் சக்காம் சுழன்றது. 5000 அக்கினிச் சுடர்களாக தமிழீழ சுதந்திர தீபத் தீ எரிந்தது.

மக்களின் விடிவிற்காக மடிந்த எமது மாவீரர்களை நினைவு கொள்ளும் இந்தப் புனித நாளில் எந்த உன்னத இலட்சியத்திற்காக அவர்கள் உயிரை அர்ப்பணித்தார்களோ -

இந்த இலட்சியப் பாதையில் தளராது தொடர நாமும் உறுதி பூணுவோமாக.

### பின்போடப்பட்டது

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட பாடசாலைகளில் திட்டமிட்டபடி 23-11-1992 திங்கட்கிழமை தொடக்கம் நடத்தவிருந்த பரீட்சைகள் தவிர்க்க முடியாத காரணத்தால் நடாத் முடியவில்லையெனவும் ஆண்டு 3, 4, 5க்கான பரீட்சை 30-11-1992, 1-2 1992 முறையே நடைபெறுமெனவும் ஆண்டு 6,7,8க்கான பரீட்சை 30-11-1992 தொடக்கமும், ஆண்டு 9, 10க்கான பரீட்சை 18-12-1992 தொடக்கம் நடாத்தப்படுமெனவும் அதிபர்களுக்கு புதிய நேர சூசி அனுப்பிவைக்கப்படுமென பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

### புலிகளின்

ஒழுங்கான முறையில் மீட்பு நிதியை மீளக் கையளிப்பது ஒரு சந்தோஷமான காரியம்'' என்றார்.

''முன்பு சில குழுக்கள் என்னிடம் வற்புறுத்திப் பணத்தைப் பெற்றுக் கொண்டன, தமிழீழ மீட்பு நிதிக்காக விடுதலைப் புலிகள் அமைப்பு விடுத்த பகிரங்க வேண்டுகோளை அடுத்து மீட்பு நிதியை மனமுவந்து வழங்கினேன்'' என்று மீட்பு நிதிகடனை மீளப் பெற்றுக் கொண்ட யாழ் செயலகத்தில் கடமை புரியும் எஸ் நடராசா தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், எனது மகளின் சங்கிலியைத்தான் மீட்பு நிதியாக வழங்கினேன், இந்த நிர்ப்பந்தமான கால கட்டத்தில் எனது மகள் சங்கிலி போட்டுத்தான் அழகு பார்க்கவேண்டும் என்ற அவசியமில்லை. மீட்பு நிதியை பவுண் காசாக மீளப் பெற்றுள்ள நான் அதைப்பத்திரப்படுத்தி வைத்திருக்க விரும்புகிறேன். தவிர்க்க முடியாத நெருக்கடி ஏற்படும் சமயத்தில் அதை என்ன செய்யலாம் என்பதைப் பற்றி யோசிக்கலாம் என்றார்.


வாழ்விடமாய்த் திகழ்கிறது.''

''இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்தமண் எனக்கு சுவையான உணவைத் தந்து என் பசியைத் தீர்த்துவைக்கிறது.''

''இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்தமண் சுத்தமான காற்றை எனக்கு சுவாசிக்கத் தருகிறது.''

**"தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்"**

(சி/5456)

## வேலை வாய்ப்பு

விவசாயப் பண்ணை, தெங்குச்செய்கை ஆகியவற்றில் கல்வி அறிவும் மூன்று வருட அனுபவமும், அல்லது பத்து வருடத்திற்குக் குறையாத அனுபவமும் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் சான்றிதழ்களுடன் இம்மாதம் 28ஆம், 29ஆம் திகதிகளில் காலை 10-00 மணிக்கும் 12-00 மணிக்கும் இடையில் யாழ்ப்பாணம் கந்தர் மடத்தில் அமைந்துள்ள யாழ். மாவட்ட வருவாய்ப்பகுதிச் செயலகத்திற்கு வருகைதரும்படி வேண்டப்படுகின்றனர்.

(5467)

## கணக்கியல்/கணக்காய்வுப் பயிற்சி நெறி

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை, கணக்கியல் மற்றும் கணக்காய்வு தொடர்பான பயிற்சிநெறியொன்றை நடாத்தவுள்ளது. கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் வர்த்தகப் பிரிவில்சித்தியடைந்த, மாவீரர், போராளிகள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்தும், மற்றும் வசதி குறைந்த மாணவர்களிடமிருந்தும் (இருபாலாரும்) விண்ணப்பங்கள்கோரப்படுகின்றன. விண்ணப்பம் அனுப்பும் உறையின் இடது பக்கமேல் மூலையில் கணக்கியல் /கணக்காய்வுப் பயிற்சி நெறி எனக் குறிப்பிடவும்.

பயிற்சி நெறிக்கான செலவு முழுவதும் எம்மால் ஈடுசெய்யப்படும்.

விண்ணப்ப முடிவு நாள் 10-12-1992

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:

**யாழ். மாவட்ட வருவாய்ப்பகுதிச் செயலகம்,**
**கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**

(5448)